விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: நான்கு

*Valampurii*

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 09 வெள்ளிக்கிழமை (25.08.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 240

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர்

# இன்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு


## நேற்று அரச பிரதிநிதிகளுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய பதில்தலைவ ரும் விடைபெற்றுச் செல்லும் தலைவரும் இன்று விடுதலைப்புலிகளின் பிரதி நிதிகளைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

இச் சந்திப்பில் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல் ஹெய்மினால் அனுப்பி வைக் கப்பட்ட விசேட தகவலை யும் சமாதானம் தொடர் பாக அர சாங்கத்தின் நிலைப்பாட டையும் அவர்கள் விடுதலைப் புலிகளிடம் தெரிவிக்க வுள்ளனர்.

(04 ஆம் பக்கம் பார்க்க)



## இரத்ததானம் செய்ய மக்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனாவைத்தியசாலையின் இரத்த வங்கியில் இரத்தத்திற்கு பெரும் தட் டுப்பாடு நிலவு[illegible]ாக அதன் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் தற்போது நிலவிவரும் அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ். போதனாவைத்தியசாலையில் இரத்தத்திற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் சாதாரண நோயாளர்களுக் கும் குருதிப் பெருக்கு ஏற்பட்டு வைத்தியசா லைக்கு. வரும் நோயாளர்களுக்கும் இரத் தம் வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# இணைத்தலைமை நாடுகளின் கூட்டம் செப்ரெம்பர் 12 இல் பிரெஸ்ஸெஸ்சில்

## வடக்கு–கிழக்கு நிலைமை தொடர்பில் ஆராயப்படும்

இலங்கை சமாதான நடவடிக்கைகளுக் கான இணைத் தலைமை நாடுகளின் கூட் டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி பிரெஸ்ஸெசில் நடைபெறவுள்ளது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் தற்போ தைய நிலைவரம் மற்றும் ஜெனிவா பேச்சுவார்த் [illegible] யப்படவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் இக்கூட்டம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தின் முடிவில் இணைத்தலைமை நாடுகளினால் அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார [illegible] எரிக்சொல்ஹெய்ம்,யப்பானின் விசேட பிரதி நிதி யசூசி அகாசி, அமெரிக்காவின் அர சியல் விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க செயலாளர் நிக்கலஸ் பேர்ன்ஸ் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். இக் கூட்டத்தில் தற் போது வடக்குக்கிழக்கில் இடம்பெறும் [illegible]

போதனாவைத்தியசாலையில் இரத்தத்திற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் சாதாரண நோயாளர்களுக்கும் குருதிப் பெருக்கு ஏற்பட்டு வைத்தியசாலைக்கு.வரும் நோயாளர்களுக்கும் இரத்தம் வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு (04 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை சமாதான நடவடிக்கைகளுக்கான இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி பிரெஸ்ஸெசில் நடைபெறவுள்ளது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் தற்போதைய நிலைவரம் மற்றும் ஜெனிவா பேச்சுவார்த்தைகளின் பின்னர் இடம் பெற்றுவரும் வன்முறைகள் சம்பந்தமாக இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் இக்கூட்டம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தின் முடிவில் இணைத்தலைமை நாடுகளினால் அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் பெனிட்டா வால்டனர் , நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தியமைச்சர் எரிக்சொல்ஹெய்ம்,யப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாசி, அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க செயலாளர் நிக்கலஸ் பேர்ன்ஸ் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். இக் கூட்டத்தில் தற்போது வடக்குக்கிழக்கில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பாக விவாதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் யாழ்ப்பாண அலுவலகம் தீக்கிரை

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் யாழ். கிளை அலுவலகம் நேற்று முன்தினம் ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்தவேளை அடித்து நொருக்கி எரியூட்டப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு 11 மணியளவில் அலுவலக வளாகத்தினுள் புகுந்த சுமார் ஆறு ஆயுதபாணிகள் அங்கு கடமையில் இருந்து காவலாளியை மிரட்டி வெளியேற்றி விட்டு அலுவலகத்திற்குள் புகுந்து அங்கிருந்த கணனிகள், உபகரணங்கள், ஆவணங்கள்,தரவுகள் (04 ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சி கிழக்கில் கிபீர்குண்டுத்தாக்குதல்

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வடமராட்சி கிழக்கில் கட்டைக்காட்டுப் பகுதியில் விமானப்படையின் கிபீர் விமானங்கள் நேற்றுக் காலை 2 தடவைகள் தாக்குதல் நடத்தியுள்ளன.

காலை 8.50 மணியளவில் வானில் வட் டமிட்டு இரண்டு குண்டுகளை வீசிச்சென்ற இந்த விமானங்கள் இரண்டு மணிநேரம் கழித்து வந்து மேலும் நான்கு குண்டுகளை வீசியதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத் தாக்குதலினால் அப் பகுதியில் உள்ள கடற்றொழிலாளர்களின் படகுகள் பலத்த சேதமடைந்துள்ளன. மேற்படி தாக்குதலில் கடற்புலிகளின் (04 ஆம் பக்கம் பார்க்க)

# தென்பகுதி அரச உத்தியோகஸ்தர்களே கப்பலில் அனுப்பிவைக்கப்படவுள்ளனர்

## இன்று செயலகத்திற்கு வருமாறு அவர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தற்பொழுது தங்கியிருக்கும் தென்பகுதியில் கடமையாற்றும் அரசாங்க உத்தியோகஸ்தர்களே முன்னுரிமை அடிப்படையில் கப்பலில் அனுப்பப்படவுள்ளனர். யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை ஏற்றிவரும் கப்பலில் அவர்கள் பிரயாணம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

# கரும்புலி மில்லரின் நினைவுச்சிலை உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த கரும்புலி கப்டன் மில்லரின் நினைவுருவச் சிலை சீருடையினரால் உடைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை வளாகத்திற்குள் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் உள்நுழைந்த சீருடையினர் நினைவுருவச் சிலையின் ஒரு பகுதியினை உடைத்துவிட்டுச் சென்றதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

மீண்டும் நேற்று காலை ஏனைய பகுதிகளையும் அடித்து உடைத்ததுடன் சிலையினையும் முற்றாக இடித்து வீழ்த்தப்பட்டுள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜே.வி.பி.தலைவரை கைது செய்ய ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை

(கொழும்பு)

குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் ஜே.வி.பித் தலைவர் சோமவன்ச அமரசிங்கவை கைது செய்யும்படி பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடுமாறு ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குடிவரவு குடியகல்வு சட்டத்திருத்தம் மீது நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜோன் அமரதுங்க,

புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஜே.வி. பித் தலைவர் சோமவன்ச அமரசிங்க மற்றும் ஏனைய உறுப்பினர்களை சட்ட அதிகாரிகள் தேடி வந்த காலத்தில் அமரசிங்க படகு மூலம் இந்தியாவுக்குத் தப்பியோடினார் எனத் தெரிவித்தார்.

திருத்தச் சட்ட மூலத்தை சட்டத்துறை அமைச்சர் அமரசிறி தொடங்கொட நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்ததையடுத்து உரையாற்றி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க ஒரு தடவைக்கு இரு தடவைகள் அமரசிங்க சட்டத்தை மீறியுள்ள போதிலும் அவரை இதுவரை கைது செய்யாமைக்கான காரணத்தை அறிய ஐக்கிய தேசியக் கட்சி விரும்புகிறது என்றார். (ஏ-1)

# சிங்கள மக்களுக்கு அச்சமென்பது தெரியாதாம்

## மேர்வின் சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

சிங்கள மக்களுக்கு பயம் என்றால் என்னவென்றே தெரியாது என்று பிரதியமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கு நிலைமைகள் தொடர்பான சபை ஒத்திவைப்புப் பிரேரணையில் பேசிய அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

சிங்கள மக்களுக்குப் பயம்என்றால் என்னவென்று தெரியாது. பயம் என்றால்அடி மட்டத்தால் அளக்கப்படுவதா என்றே ஒவ்வொரு மக்களும் கேள்வி எழுப்புவர்.

எனினும் எதிரி மறைந்திருந்து தாக்கும் போது அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கும்இனம் எமது இனம் அல்ல. எதிரிகளை தாக்கியழிக்கும் வீரச்சிங்களவர்கள் நாம்.

விடுதலைப்புலிகள் பயங்கரவாத செயல்களில் தயக்கம் இன்றி ஈடுபடுகின்றனர். பயங்கரவாதச் செயல்களைக் கைவிடாத வரை அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படும்.

எமது ஜனாதிபதி வீர மைந்தன். அவர் மனிதாபிமானம் இன்றி ஒருபோதும் செயற்படமாட்டார். எனினும் நாட்டைக் காப்பாற்ற அவர் பல நடவடிக்கைகளை எடுக்கிறார் என அவர் கூறினார். (ச)

# வவுனியாவில் நேற்று ஒருவர் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா நாவற்குளத்தில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நேற்றுக் காலை 11.30 மணியளவில் இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. கொல்லப்பட்டவர் விடுதலைப்புலிகள் உறுப்பினர் என இராணுவத்தினர் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இவரிடமிருந்து கைத்துப்பாக்கி ஒன்றும் கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டதாக படையினர் மேலும் தெரிவித்தனர். (ச-5)

# மன்னாரில் கடற்படைமீது கிளைமோர்த் தாக்குதல்

(மன்னார்)

மன்னார் பேசாலையில் சுற்றுக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் மீது நேற்றுக் காலை 11.30 மணியளவில் கிளைமோர்த்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பேசாலை–தலைமன்னார் வீதியில் இலங்கை மீன்பிடிக் கூட்டுஸ்தாபனத்திற்கு அருகில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் மீது இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

சம்பவத்தில் ஏற்பட்ட சேத விபரம் இதுவரை தெரிய வரவில்லை. சம்பவத்தையடுத்து படையினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களில் இரண்டு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளைமோர்த் தாக்குதலையடுத்து அப் பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 3 ஆயிரத்து 500 பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி பேசாலை வெற்றிமாதா தேவாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர். (ச-5)

# இளைஞன் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட சத்துருக்கொண்டான் பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் இனந்தெரியாதோரால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

வாசுதேவன் ராகுதேவன் (வயது-26) என்பவரே கொல்லப்பட்டவர் எனத் தெரிய வருகிறது. இவர் ஆட்டோ சாரதி எனவும் மோட்டார் சைக்கிளில் சென்ற இரு நபர்களே இச் சூட்டினை நடத்தியதாகவும் மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)

# சேவையை முழுமையாக வழங்குவதில் போக்குவரத்துச் சபைக்கு சிக்கல் நிலை

## அதன் முகாமையாளர் கவலை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சேவைகளை முழுமையாக மக்களுக்கு வழங்குவதில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக அதன் முகாமையாளர் க.கணேசபிள்ளை கவலை தெரிவித்தார்.

தற்போது யாழ்.மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் போது கூடிய சேவைகளை வழங்குவதற்காக சாரதிகள், நடத்துநர்கள் டிப்போக்களில் தங்கியிருந்து சேவைகளை மேற்கொள்ள முடியவில்லை. அவர்களுக்கான இதர வசதிகளை வழங்குவதற்கு முடியாதுள்ளதாக அவர் கூறினார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஊழியர்களுக்குக் கடந்த மாதம் சம்பளம் வழங்காதபோதும் அவர்கள் தமது பணிகளைச் சீராகச் செயற்படுத்துவதாக தெரிவித்த முகாமையாளர்,

பஸ்களுக்குரிய உதிரிப்பாகங்கள் இல்லாததால் பழுதடைந்த பெருமளவான பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்த முடியவில்லை எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை சகல ஊழியர்களும் ஊரடங்கு தளர்த்தப்படும் நேரங்களில் தமது சாலைகளுக்கு சமுகம் தருமாறும் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் முகாமையாளர் க.கணேசபிள்ளை மேலும் தெரிவித்தார். (ச-5)

# நூலகப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கைநெறி தரம் 1 (2005/06)ற்கான பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

நாளையும் நாளை மறுதினமும் இலங்கை நூலக சங்கத்தினால் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த மேற்படி பரீட்சை யாழ். குடாநாட்டில் நிலவும் தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாண நிலையத்தில் பிற்போடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண நிலையத்தில் இப் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என இலங்கை நூலக சங்க யாழ்.நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார். (ச)

# கைக்குண்டுத் தாக்குதலில் மூன்று பொலிஸார் படுகாயம்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனையில் கைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்கள் படுகாயமடைந்துள்ளனர். நேற்று முன்தினமிரவு 8 மணியளவில் வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் மீதே கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த மூவரும் பொலநறுவை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-5)

# விடுதலைப்புலிகளின் ஆயுதக்கொள்வனவு மத்தியநிலையம் கனடாவில் செயற்பட்டு வருகிறது!

## அமெரிக்க உளவுத்துறை தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் கொள்வனவு செய்யும் மத்திய தளம் கனடாவில் இயங்கி வருவதாக அமெரிக்க உளவுச் சேவை தெரிவித்துள்ளது.

இத்தகவலை றொறன்ரோ சன் இணையத்தளம் வெளியிட்டுள்ளது. விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் 8 பேர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர்.

இதே நாளிலேயே கனடாவிலும் ஐந்து பேர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் அமெரிக்க நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு விமான எதிர்ப்பு ஏவுகணைகள்-100, ஏ.கே.ரகத் துப்பாக்கிகள்-500 மற்றும் கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள், யுத்த டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் என்பவற்றை கொள்வனவு செய்ய இவர்கள் முயற்சித்ததாக கனடியப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்குறித்த ஆயுதங்களைக் கொள்வனவு செய்த பின்னர் சர்வதேச கடலின் ஊடாக எடுத்து வந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் கப்பல் மூலம் இலங்கைக்குக் கொண்டு செல்ல திட்டமிட்டிருந்ததாக அமெரிக்க உளவு சேவை தெரிவித்ததாக இணையத் தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட அனைவரும் தலைவர் பிரபாகரன் மற்றும் விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் ஆகியோருடன் நேரடிச் சந்திப்புக்களை நடத்தியிருப்பதாகவும் இணையத் தளச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# துப்பாக்கிச் சூட்டில் இருவர் படுகாயம்

வவுனியா தாழிக்குளத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை வவுனியா மன்னார் வீதியின் செக்டர் 5 தாழிக்குளம் பிரதேசத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

15 நிமிடங்கள் வரை நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் ஒருவரும் பொதுமகன் ஒருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த இருவரும் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ச)

# அரச சார்பற்ற நிறுவனங்கள் அவசரமாக ஒன்று கூடுகின்றன

யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து அரச சார்பற்ற நிறுவனங்கள் கலந்துரையாடவுள்ளன. இக் கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெறவுள்ளதாக இணையத்தின் செயலாளர் சிவசக்திவேல் தெரிவித்துள்ளார்.

இக் கூட்டத்தில் அனைத்துஉள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது காணப்படும் சூழ்நிலைகளையடுத்து தமது நிறுவனங்கள் செயற்பட முடியாத நிலை தோன்றியுள்ளதால் இக் கூட்டம் அவசரமாகக் கூட்டப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

இதேவேளை சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறுவது குறித்தும் ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (ச)

# அப்போஸ்தல போதகரை காணவில்லை என முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

மீசாலையில் அப்போஸ்தல போதகரை காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

அப்போஸ்தல போதகரான வின்சன் விநோதராஜா அவரது மனைவி மற்றும் அவரது பிள்ளை ஆகிய மூவரும் கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்ற மோதலினையடுத்து காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

அமைதிக்கு உழைப்பதே உலகிற்கு நாம் செய்யும் கடமையாகும். சமாதான முழக்கங்களை வெறுமனவே கூறிக் கொண்டிராமல் அமைதிக்காகத் தீவிரமாகப் பாடுபட்டால்தான் வருங்கால உலகம் பாதுகாக்கப்படும்.

-டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

## சர்வதேச சமூகம் பொறுப்புடன் நடக்க வேண்டும்

நாட்டின் தற்போதைய சூழ்நிலை மிகவும் துரதிஷ்டவசமானது. நாடு பூராகவும் போர் மூண்டுள்ளது.

தென்னிலங்கையில் ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் இனவாதத்தை தூண்டிவிடும் நடவடிக்கையில் மிகவும் துடிப்புடன் செயற்படுகின்றன.

அதேவேளை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் அரசிடம் எதுவித திட்டங்களும் இல்லை. இதற்கு எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பு இன்மையும் ஒரு வகையான காரணம் எனலாம். சர்வதேச சமூகத்தின் அழுத்தம் போதுமானதாக இல்லை.

இதனால் போர் தரும் துன்பம் மிகவும் கொடூரமானதாகவே இருக்கும். தற்போது கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்தவர்கள் மெதுவாக நகரத் தொடங்கியுள்ளனர். இது நாட்டின் எதிர்கால அமைதிக்கு அவ்வளவு ஆரோக்கியமானதல்ல.

கண்காணிப்புக் குழுவின் நகர்வு நோர்வேயின் விலகலின் அறிகுறியாகவே கொள்ளப்படும். ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தடை செய்யாதிருந்தால் தற்போதைய அசாதாரண நிலைமை தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

இதனையே கண்காணிப்புக் குழுவின் தலைவர் பௌயரும் அண்மையில் சுட்டிக் காட்டியிருந்தார்.

விடுதலைப்புலிகளைத் தடை செய்ய வேண்டாம் என உலகு வாழ் தமிழ் மக்கள் கோரிக்கை விட்டிருந்த போதிலும் அதற்கு ஐரோப்பிய ஒன்றியம் செவிமடுக்கவில்லை.

அதேவேளை விடுதலைப்புலிகளைத் தடை செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விட்டதை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுக் கொண்டது. இங்குதான் ஜனாதிபதியும் ஐரோப்பிய ஒன்றியமும் பெரும் தவறிழைத்து விட்டனர்.

சமாதான சூழ்நிலையைப் பேணுவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை பாதகமாக அமையும் என அரசியல் அறிவாளர்கள் எடுத்துக் கூறிய போதிலும், அதனை ஐரோப்பிய ஒன்றியம் செவிமடுக்கவில்லை.

இதன் விளைவாகவே தற்போதைய அசாதாரண சூழ்நிலை நாட்டில் ஏற்பட்டுள்ளது. எனவே இலங்கை விவகாரத்தில் விடுதலைப்புலிகளின் விடயத்தில் சர்வதேச சமூகம் தூர நோக்குடனும் நிதானத்துடனும் நடந்து கொள்ள வேண்டும்.

# ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையே தற்போதைய நிலைக்குக் காரணம்

### இலங்கையின் நிலைகுறித்து உல்ப் ஹென்றிக்சன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள வன்முறைச் சூழ்நிலைக்கு விடுதலைப்புலிகளுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையே காரணம் என்று ஓய்வு பெற்றுச் செல்லும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகள் அமைப்பை ஐரோப்பிய ஒன்றியம் மே மாதம் தடை செய்வதாக அறிவித்திருந்தது. அதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாகவே நாம் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு விரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பித்திருந்தோம்.

அதில் எமது எதிர்வு கூறல்களைக் குறிப்பிட்டிருந்தோம். விடுதலைப்புலிகள் அமைப்பின் மீது தடை வருமேயானால் இப்படியான பாரதூரமான வன்முறைச் சூழலுக்கு நாடு முகம் கொடுக்க நேரிடும் என்றும் அதில் நாம் குறிப்பிட்டிருந்தோம்.

அவை எதனையும் கருத்தில் கொள்ளாது ஐரோப்பிய ஒன்றியம் தனது முடிவை அறிவித்தது. எமது அறிக்கையை அவர்கள் சரியாக வாசிக்கவில்லை என்றுதான் நினைக்கிறேன். ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைகுறித்த முடிபானது உயர் மட்டத்தில் எடுக்கப்பட்டது.

இப்படி எல்லாம் நடக்கும் என்று தமக்குத் தெரியாது என்று அவர்கள் கூற முடியாது. நாம் தெளிவாக முன்னரே அது குறித்து எதிர்வு கூறியிருந்தோம்.

விடுதலைப்புலிகளைத்தடை செய்தது ஐரோப்பிய ஒன்றியம் இழைத்த தவறு என்றே நான் கூறுவேன் .அரசும் விடுதலைப்புலிகளும் சமாதானப் பேச்சு மேசையில் சம அந்தஸ்துள்ளவர்கள். அதன் அடிப்படையில்தான் இரு தரப்பிற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

அப்படி இருக்கையில் அவற்றில் ஒரு தரப்பை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் சேர்த்தால் அந்தச் சிக்கல் நிலைக்குள்ளால் நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பது மிகக் கடினம். அதற்கு நாம் முகம் கொடுத்தோம் என அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# யுத்த விமானங்கள் பறக்கும்போது பேச்சுக்கள் எப்படி சாத்தியமாகும்

### தயா மாஸ்டர் கேள்வி

யுத்த விமானங்கள் தலைக்கு மேல் பறக்கும்போதுபேச்சுக்கள் எப்படி சாத்தியமாகும் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் ஊடக ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்டர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு தயா மாஸ்டர் தகவல் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அரசின் யுத்த விமானங்கள் சிறிது நேரத்திற்கு முன்னர் கூட எமது பிரதேசத்திற்கு மேலாக வட்டம் இட்டுச் செல்கிறது. இவ்வாறானதொரு சூழ் நிலையில் அமைதிப் பேச்சுக்கள் எப்படி சாத்தியமாகும்?

சமாதான அறைகூவல் விடுக்கும் அரசு தனது வேண்டுகோளில் இதய சுத்தியுடன் செயற்பட விரும்பினால் அமைதிக்கான புறச்சூழலை முதலில் உருவாக்க வேண்டும்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கான பாதைகள் அனைத்தையும் மூடி மக்களுக்குப் பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது இராணுவம்.

இதனால் இயல்பு நிலை பாதிக்கப்பட்டு பாரிய பொருளாதார சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளனர் மக்கள். இவ்வாறான சூழ்நிலையில் நாம் எப்படிப் பேச்சு நடத்த முடியும்!

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி மக்கள் பெரும்பாலும் விவசாயம் மற்றும் மீன்பிடியை ஜீவனோபாய தொழில்களாக கொண்டவர்கள். ஆகவே இராணுவத்தினரால் பாரியளவில் அவர்கள் பாதிக்கவில்லை.

ஆனால் குடாநாட்டு மக்கள் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர். மூதூர் மற்றும் மட்டக்களப்பு மக்கள் பாரிய பொருளாதார சுமைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர் எனத் தயா மாஸ்டர் தெரிவித்துள்ளதாக அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

# யாழில் கடந்த நான்கு நாட்களாக யுத்த முனையில் மோதல்கள் இல்லை

(கொழும்பு)

யாழ்.கள முனையில் கடந்த நான்கு நாட்களாக பாரிய சண்டை எதுவும் நடைபெறவில்லை. வழமையாக நடைபெறும் ஆட்லறித் தாக்குதல் மற்றும் மோட்டார் தாக்குதல்களே அவ்வப்போது நடைபெற்று வருகின்றன என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குடாநாட்டு முன்னணிக் காவலரண்கள் மீதான ஊடறுப்புத் தாக்குதல் முயற்சிகளில் ஈடுபட்ட விடுதலைப்புலிகள் அதில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்காததையடுத்து தனது அணிகளை மீள் சீரமைக்கும் பணிகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர் போல் உள்ளது.

அதற்காக அவர்கள் எடுத்துள்ள போர் ஓய்வு எவ்வளவு நாட்களுக்கு நீடிக்கும் என்று சொல்ல முடியாது என்றும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை குடாநாட்டில் கடந்த இரண்டு வாரங்களாக இடம்பெற்ற கடும் சமர் தணிந்து தற்போது திருகோணமலையில் தாக்குதல்கள் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலைப்புலிகள் சம்பூர்ப் பகுதியிலிருந்து திருகோணமலையில் உள்ள படையினரின் முகாம்களுக்கு ஆட்லறி மற்றும் மோட்டார் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுணதீவு இராணுவ முகாமும் விடுதலைப்புலிகளின் மோட்டார் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. விடுதலைப்புலிகளின் இத் தாக்குதலுக்குப் பதில் நடவடிக்கையாக இராணுவம் பல் குழல் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டு வருவதாகவும் அவை மேலும் குறிப்பிட்டுள்ளன. (ச-5)

# அநுராவை நாடு திரும்புமாறு ஜனாதிபதி உத்தரவு

ஜனாதிபதியின் அனுமதியின்றி நேபாளத்தில் நடைபெறவுள்ள கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ளச் சென்றுள்ள சுற்றுலாத் துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவை உடனடியாக நாடு திரும்புமாறு ஜனாதிபதி மகிந்த உத்தரவிட்டிருப்பதாக அரசியல் வட்டாரத் தகவல்க்ள் தெரிவிக்கின்றன.

நேபாளக் கூட்டம்எதிர்வரும் 28 ஆம் திகதியே ஆரம்பமாகவுள்ளது. இதில் கலந்துகொள்ளவுள்ள அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க சில தினங்கள் தாய்லாந்தில் தங்கியிருந்த பின்னரே நேபாளம் செல்லவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னரும் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க முன்னனுமதி பெறாது கூட்டங்களில் கலந்து கொண்டமை குறித்தும் மகிந்த கவனம் செலுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மகிந்தவின் உத்தரவுக்கு அமைய ஜனாதிபதியின் செயலகத்தினால் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க திருப்பி அழைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ)

# ஒழுங்கு நடவடிக்கையை மீறுவோர்மீது நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி உத்தரவு

கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைகளை மீறிச் செயற்படும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் மீது தராதரம் பார்க்காது அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறி சேனாவிற்கு உத்தரவிட்டுள்ளார்.

ஒழுங்கு நடவடிக்கைகளை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரத்தை மகிந்த, கட்சியின் செயலாளருக்கு வழங்கியுள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்திற்கு சில உறுப்பினர்கள் எவ்வித அறிவித்தல்களையும் விடுக்காது கலந்து கொள்ளாமை, கட்சியின் அனுமதியின்றி அமைச்சர்கள் வேறு இயக்கங்களுடன் இணைதல், கூட்டங்களில் பல்வேறு உரைகளை நிகழ்த்துதல் ஆகிய காரணங்களால் மகிந்த இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில் நடைபெற்ற கூட்டத்திலேயே மகிந்த இதனைத் தெரிவித்துள்ளார். இந்தக் கூட்டத்தில் சுமார் 15 உறுப்பினர்கள் அளவிலேயே கலந்து கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ச-5)

## வெளிநாட்டுப் பிரஜைகளுடன்

# சர்வதேச செஞ்சிலுவைக் கப்பல் இன்று யாழில் இருந்து புறப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிநாட்டு பிரஜாவுரிமையுடையவர்களை கொழும்பிற்கு ஏற்றிசெல்வதற்காக சர்வதேச செஞ்சிலு வைச்சங்க பயணிகள் கப்பல் இன்று காங் கேசன்துறைக்கு வருமென எதிர்பார்க்கப்படு கிறது.

இன்று நண்பகலுக்கு முன்னதாக குறித்த கப்பல் வந்தடையுமாயின் பிற்பகல், 150 பய ணிகள் யாழில் இருந்து அழைத்துச்செல்லப் படுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்தக்கப்பலில் வெளிநா டுகளில் இருந்து யாழுக்கு வந்தவர்களை யும் யாழ்.போதனாவைத்தியசாலையின் சிபார்சிற்கு இணங்க கொழும்பில் அவசர சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காக மூன்று நோயாளர்களையும் அவர்களுக்கு உதவி யாக மூன்று உதவியாளர்களையும் ஏற்றிச் செல்லவுள்ளதாக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார். (ச-5)

# தீவுப்பகுதிப் போக்குவரத்துக்கு நேற்று அனுமதி மறுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து தீவகத்திற் கான போக்குவரத்துக்கள் நேற்று நிறுத்தப் பட்டிருந்தது.

யாழில் இருந்து சென்ற மக்கள் பண் ணைப்பாலத்தில் வைத்து இராணுவத்தின ரால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் வண்டியில் சென்ற பெருமளவானோர் மீண் டும் பஸ் நிலையத்தில் கொண்டுவந்து இறக் கப்பட்டனர்.

இதேவேளை நெடுந்தீவு ,நயினாதீவு மற் றும் புங்குடுதீவில் இருந்து யாழ்.நோக்கி புறப்பட்ட நான்கு மினிபஸ்கள் புங்குடுதீவு மடத்துவெளியில் தடுத்து வைக்கப்பட்டன.

ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்டமை குறித்து தமக்கு அறிவிக்கவில்லையென கடற்படையினர் தெரிவித்தனர்.

இதேவேளை வேலணை சாட்டி,வங்களா வடி போன்ற பிரதேசங்களில் கடற்படையி னர் தேடுதல் மேற்கொண்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச)

# யாழ்.வர்த்தகர்களுக்கான பொருட்கள் திருகோணமலையிலிருந்து கப்பலில் !

## அமைச்சர் அமீர் அலி தெரிவித்தார்

கொழும்பில் இருந்து பொருட்களை ஏற் றிக்கொண்டு யாழ்.நோக்கி புறப்பட்ட றுகுணு கப்பல் இன்று பருத்தித்துறை துறை முகத் தை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இக் கப்பல் துறை முகத்தை வந்தடைந் ததும் பொருட்களை இறக்கும் பணிகள் முழு அளவில் மேற்கொள்ளப்படும் என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை பருத்தித்துறை துறைமுகத் தில் இருந்து தென்பகுதி அரச உத்தியோகஸ் தர்களுடன் திருமலைக்கு செல்லும் கப்பல் மீண்டும் அங்கிருந்து யாழ்.வர்த்தகர்களுக் கான பொருட்களை ஏற்றிக்கொண்டு மீண் டும் யாழ்.நோக்கி புறப்படும் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அமீர் அலி வலம்புரிக்குத் தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து யாழ்.நோக்கி கப் பல் புறப்படுவதால் ஏற்படும் காலதாமதத்தை தடுப்பதற்காக திருகோணமலையில் இருந்து பொருட்களை அனுப்புவதற்கு ஏற்பாடு செய் யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாணத்திற்குத் தேவையான எரிபொருட்கள் தாராளமாக இருப்பதாக தெரிவித்த அவர் மக்கள் எரி பொருட்களைப் பெறுவதில் முண்டியடிக்கத் தேவையில்லை எனவும் கூறினார். (ச-5)

## கண்காணிப்புக் குழுவின்...

கண்காணிப்புக்குழுவின் தற்போதைய தலைவரான சுவீடன் நாட்டின் முன்னாள் இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் விடைபெற அவரது இடத்திற்கு நோர்வேயின் முன்னாள் இராணுவத்தள பதி மேஜர் ஜெனரல் லார்ஸ் ஜொஹான் ஷோல்வ்பெர்க் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய பதில்தலைவராக நியமிக்கப்பட் டுள்ள மேஜர் ஜெனரல் லார்ஸ் ஜொஹான் ஷோல்வ்பெர்க் நேற்று கொழும்பை வந்த டைந்தார்.

கொழும்பில் இருந்து கிளிநொச்சிக்கு தரைவழியாக இன்று வருகைதரும் புதிய பதில்தலைவரும் விடைபெறும் தலைவரும் பிற்பகல் 2 மணிக்கு விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளனர்.

இச் சந்திப்பில் அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட பிரதி நிதிகள் கலந்துகொள்வர். இவர்களது கிளி நொச்சி விஜயத்தின்போது இலங்கையின் விசேட சமாதானத்தூதுவர் எரிக்சொல் ஹெய்மினால் தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பிவைக்கப்பட்ட விசேட செய்தியை அவர்கள் தெரிவிக்கவுள்ளனர். அத்துடன் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக அரசின் நிலைப்பாடு குறித்தும் அவர்கள் விளக்க வுள்ளனர்.

நான்கு நாள் பயணம் ஒன்றை மேற் கொண்டு இலங்கை வந்துள்ள புதி பதில் தலைவர் எதிர்வரும் திங்கட்கிழமை வரை இலங்கையில் தங்கியிருப்பார் எனத்தெரி விக்கப்பட்டுள்ளது.

நோர்வேக்கு திங்கட்கிழமை திரும்பும் அவர் மீண்டும் செப்ரெம்பர் முதலாம் திகதி உத்தியோகபூர்வமாகதனதுபணிகளைபொறுப் பேற்பார் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று கொழும்பு வந்த புதிய பதில்தலைவர் மற்றும் முன்னாள் தலைவர் இருவரும் அரச சமாதான செயல கத்தலைவர் பாலிதகோகன்ன மற்றும் அரச அதிகாரிகளை சந்தித்து பேசியுள்ளனர். (ச)

## வடமராட்சி...

முக்கியமான தளத்தை தாம் வெற்றிகரமா கத்தாக்கியழித்துள்ளதாக கொழும்பில் விமானப்படை அதிகாரி ஒருவர் தெரிவித் துள்ளார்.

இதேவேளை நாகர்கோவில் முன்னணி காவலரண்களில் இருந்து இராணுவத்தி னர் குடாரப்பு ,மண்முனை, இத்தாவில், சோரன் பற்று,மாசார் பகுதிகளை நோக்கி மோட்டார் எறிகணை வீச்சுத்தாக்குதலை மேற்கொண் டதாக தெரியவருகிறது. (ச)

## தமிழர் புனர்வாழ்வுக்...

ஆகியவற்றை அடித்து நொருக்கி யுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.அலுவலகம் எரிவதைக் கண்ட அருகில் உள்ள இன்னொரு அரச சார்பற்ற அமைப்பு அலுவலகத்தினர் தீய ணைப்புப்படைக்கு அறிவித்ததை யடுத்து அவர்கள் விரைந்து வந்து அலுவலகத் தீயை அணைத்து முழுமையான சேதத்தி னை தவிர்த்ததாக தெரி விக்கப்பட்டது.

அலுவலகத்தில் இருந்த சுமார் 10 இலட் சம் ரூபாவுக்கு கூடுதலான பொருட்கள் சேத மாகியுள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தினர் தெரிவித்துள்ளனர். (ச)



நெல்லியடியில் சேதமாக்கப்பட்ட கரும்புலி கப்டன் மில்லரின் உருவச்சிலை

# சர்வதேச தொண்டர் நிறுவன பிரதிநிதி அம்பாறையில் நேற்று சுட்டுக்கொலை

(அம்பாறை)

அம்பாறை தம்புலுவிலில் சர்வதேச தொண்டர் நிறுவனம் ஒன்றின் பிரதிநிதி ஒரு வர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். யு.என்.ஓ. பி.எஸ். என்னும் சர்வதேச தொண்டர் நிறு வனத்தில் தொழில் புரியும் பி.ஜெஸ்லி என் பவரே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 8.15 மணிக்கு தம்புலு விலில் உள்ள அலுவலகத்தில் கடமையில் இருந்த அவரை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரை வெளியே அழைத்துச்சென்று தம்புலுவில் உள்ள முனையூர்க் களப்பு என்ற இடத்தில் வைத்து சுட்டுக்கொலை செய்துள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் இறந்த ஜெஸ்லி தம்பு லுவில் கோமாரியைச் சொந்த இடமாகக் கொண்டவர் என்றும் இரு குழந்தைகளின் தந்தை என்றும் தெரியவருகிறது.சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-1)

# வவுனியா ஓமந்தைப் பகுதியில் தாக்குதல் முயற்சி முறியடிப்பு

(வவுனியா)

வவுனியா நாவற்குளம் பகுதி ஊடாக தமிழீழ விடுதலைப்புலிகளின் பகுதியை நோக்கி முன்னேற முற்பட்ட படையினரின் நடவடிக்கை தமிழீழ விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

பீரங்கிக்குண்டுத் தாக்குதல்களை நேற்று நண்பகல் நடத்தியவாறு படையினர் முன் னேற முற்பட்டதாகவும் இந் நடவடிக்கைக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் பதில் தாக்குத லை நடத்தியதையடுத்து படையினர் தமது நடவடிக்கையினை கைவிட்டு பின் வாங்கி யதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விடுதலைப்புலிகளின் தாக்குதல் முயற்சி ,முறியடிக்கப்பட்டதாக இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.இதில் இரண்டு புலிகள் சாவடைந்ததாகவும் அவர் தெரிவித் தார். (ச-5)

## இரத்ததானம்...

நாளும் ஊரடங்குச்சட்டம் அமுலில் இருப்ப தால் நடமாடும் இரத்ததான முகாம்களை ஒழுங்கு படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள் ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இரத்தப்பற்றாக்குறையை நீக்க ஊரடங்கு தளர்த்தப்படும் நேரங்களில் தன்னார்வக் குருதிக்கொடையாளர்கள் தமக் குப் பொருத்தமான நேரங்களில் வந்து இரத்ததானம் செய்யும்படி கேட்கப்பட்டுள் ளனர். (ச-12)

## குடும்பஸ்தரை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயிலிருந்து நுணாவிலுக்குப் போன குடும்பஸ்தரைக்காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறை யிடப்பட்டுள்ளது.

நுணாவில் மேற்கு வேதானந்தா மடம் என்ற முகவரியைச்சேர்ந்த செல்வராசா சுவேந்திரராஜ் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே காணாமல்போனதாக முறையி டப்பட்டுள்ளது. (ச)

## தென்பகுதி அரச ...

கப்பலில் பிரயாணம் செய்பவர்களுக் குரிய பாதுகாப்பு அனுமதியை பெறுவதற்கு முக்கிய விபரங்கள் தேவைப்படுவதால் ஏற் கனவே பதிவு செய்திருந்தாலும் இன்று காலை 9 மணிக்கு பின்வரும் ஆவணங் களுடன் யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு தவ றாது சமுகமளித்து தமது விபரங்களை தெரிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஆவணங்களின் விபரம் வருமாறு, உத்தி யோகஸ்தரின் பெயர்,தேசிய அடையாள அட்டை அத்துடன் கடமையாற்றும் திணைக் களத்தினால் அண்மையில் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ அடையாள அட்டை ,யாழ்ப் பாணத்தில் தங்கியிருக்கும் முகவரி, தென் பகுதியில் தங்கியிருக்கும் முகவரி, யாழ்ப்பா ணத்திற்கு வந்த திகதியும், காரணமும்.

இதேவேளை சுயவிருப்பில் பிரயாணம் செய்யவிரும்பும்,தென்பகுதியிலிருந்து வந்த அரச உத்தியோகத்தர்களை மாத்தி ரமே பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட் டுள்ளது. (ச)

## கரும்புலி...

ஏற்கனவே இவ்வாறான முயற்சிமேற் கொள்ளப்பட்டபோது மக்களால் முறியடிக் கப்பட்டது. கரும்புலி கப்டன் மில்லரால் 1987 ஆம் ஆண்டு ஜூலை 5 ஆம் திகதி நெல்லி யடி மத்திய மகாவித்தியாலயத்தில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் மீது கரும் புலித் தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (எ-101)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 25.08.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.